சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 14.08.2025

வா.சா.1 – இளங்கோவன் S/o அருணாச்சலம்

O.S. No.279/2019

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :(5ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்)

வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு விபரம் கூறியது நான் தான். வழக்கு சொத்து எங்குள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து பொய்கைகரைப்பட்டியில் உள்ளது. வழக்கு சொத்து 2ம் பிரதிவாதி ஜெசிசுகுணாபாய்க்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் கணவர் 3ம் பிரதிவாதி முரளிபாபு என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 2ம் பிரதிவாதியிடம் சென்று நான் எவ்வாறு கிரையம் கொடுத்தேன் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி கடந்த 18.12.2009ம் தேதி அன்று 4ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு பவர் பத்திரம் எழுதி கொடுத்த விபரம் தெரியுமா என்றால் அதன் நகலை நான் கிரையம் பெறுவதற்கு முன்பாக படித்து பார்த்தேன். அசல் பத்திரத்தை பார்த்தேனா என்றால் இல்லை அசல் பத்திரம் தொலைந்துவிட்டதால் நகல் எடுத்து பார்த்தேன். 1ம் பிரதிவாதி ஜெயபாலிடம் பத்திரம் தொலைந்துவிட்டதால் FIR நகலை என்னிடம் காட்டினார். என்னிடமும் ஒரு நகல் இருக்கிறது. நகல் பொது அதிகார பத்திரத்தை நான் வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. 16.12.2024 அன்று கொடுத்துள்ள வழக்கறிஞர் அறிவிப்பு 2ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு கொடுத்த அறிவிப்பை எனக்கு நகல் கொடுததிருக்கிறார் என்றால் நான் வாங்கவில்லை. நான் வீட்டில்

குடியிருக்கவில்லை. அதற்கு முன்பாகவே நான் வீடு மாறி சென்றுவிட்டேன். நான் மேற்படி அறிவிப்பை பெற்று கொண்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ஜெசி சுகுணாபாய் அவருக்கு பதிலாக வேறொரு பெண்ணின் புகைப்படத்தை ஒட்டி பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்ததாக என் மீதும், 4ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியன் மீதும் 2ம் பிரதிவாதி புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் பேரில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு CC No.258/2018 என்ற குற்ற வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.4, மதுரை முன்பாக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கில் இருந்து என்னை விடுவிக்ககோரி மனு தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். மேற்படி மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பதிந்து கொடுத்தாக சொல்லப்படும் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்யவேண்டுமென்று மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி மனுவின் பேரில் மாவட்ட பதிவாளர் மதுரை அவர்கள் மேற்படி பொது அதிகார பத்திரம் பேரில் எழுதி கொடுக்கப்பட்ட கிரைய ஆவணங்கள் செல்லாது என்று அறிவித்துவிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கு ஆவணங்கள் ரத்து செய்த விபரம் தெரிந்தும், தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2010ம் ஆண்டு 1ம் பிரதிவாதி ஜெயபாலிடம் இருந்து கிரையம் பெற்றேன். 25.06.2014ம் தேதியன்றே முதல் தகவல் அறிக்கை என் மீது பதிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் தெரியவில்லை. 2014-15ம் ஆண்டுகளில் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு ெசய்யத விபரம் தெரியவந்தது. ஆகவே எனக்கு 2014ம் ஆண்டிலேயே மேற்படி பொது அதிகார பத்திரத்தின் பேரில் மோசடி செய்த விபரம் தெரிந்துள்ள நிலையில் நான் 3 ஆண்டுகளுக்கள்ளாக வழக்கை தாக்கல் செய்யாமல் காலம்தாழ்த்தி 2018ம் ஆண்டு இந்த

வழக்கை தாக்கல் செய்திருப்பதால் காலவரையறை சட்டத்தின் கீழ் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால்ச ரியல்ல. 2ம் பிரதிவாதி கணவர் 3ம் பிரதிவாதியான முரளிபாபு பெயரில் புகார் கொடுக்கப்பட்டு அவர் அரசு பணியில் இருந்து பணிஇடைநீக்கம் செய்யப்பட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 2010ம் ஆண்டே வழக்கு சம்பந்தப்பட்ட பவர் பத்திரங்கள் மோசடி செய்யப்பட்ட விபரம் தொடர்பாக எனக்கு 2010ம் ஆண்டே நன்கு தெரிந்திருந்தும் தெரியாது என்று சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அசல் பவர் பத்திரத்தை பார்வையிட்டால் யார் அதை 3ம் பிரதிவாதி பெயரில் எழுதி கொடுத்தாரா இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். வழக்கு சொத்து மோசடியாக கிரையம் பெற்ற விபரம் தெரிந்திருந்தும் நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.08.14 18:40:30 +0530

Sub Judge

Melur